## காஞ்சிபுரம் மாவட்டம்

# இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2022

## 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 10 X 1 = 10 | | |
|---|---|---|
| 1 | அ | விதிப்பிழைகள் |
| 2 | ஆ | விதிப் பிழை |
| 3 | ஆ | அனாமத்துக் கணக்கு |
| 4 | இ | அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும் |
| 5 | ஈ | அ, ஆ மற்றும் இ |
| 6 | இ | தொழில்நுட்ப மாற்றங்கள் |
| 7 | ஆ | இறுதியில் |
| 8 | இ | முதலினச் செலவு |
| 9 | ஈ | முதலின வரவுகள் |
| 10 | இ | நடப்பு காலத்திற்கு |

## பகுதி --- ஆ

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $5 \times 2 = 10$

**11. விதிப்பிழை என்றால் என்ன?**

- நடவடிக்கைகளை கணக்கு ஏடுகளில் பதிவு செய்யும் போது, அடிப்படைக் கணக்கியல் விதிகளை தவறாக பின்பற்றுவதால் ஏற்படும் பிழையே விதிப்பிழை எனப்படும்.

**12. தேய்மானம் என்றால் என்ன?**

- நிலைச் சொத்தின் அடக்க விலையை, அதனுடைய பயனளிப்புக்காலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் செயல்முறை தேய்மானம் ஆகும்.

**13. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன?**

- நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாயினத் தன்மையுள்ள ஒரு செலவின் பயன், எதிர்வரும் ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால், அச்செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும்.
- இச்செலவின் பயன், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு கிடைக்கும்.

**14.**

(அ) விற்பனை கணக்கில் ₹. 100 வரவு வைக்க வேண்டும்

(ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டின் கணக்கில் ₹. 200 பற்று வைக்க வேண்டும்



**15.**

சொத்தின் ஆரம்ப அடக்கவிலை = வாங்கிய விலை + நிறுவகைச் செலவுகள்

= ₹. 40,000 + ₹. 2,000 = ₹. 42,000

$$\text{ஆண்டு தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$$

$$= \frac{42{,}000 - 0}{5} = \frac{42{,}000}{5} = ₹.\ 8{,}400$$

**16.**

### தேய்மானத் தொகை காணல்

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| நிலைச்சொத்தின் மதிப்பு | 50,000 |
| கழிக்க : முதல் ஆண்டு தேய்மானம் ( 50,000 x 15/100 ) | 7,500 |
| | 42,500 |
| கழிக்க : இரண்டாம் ஆண்டு தேய்மானம் ( 42,500 x 15/100 ) | 6,375 |
| சொத்தின் ஏட்டு மதிப்பு | 36,125 |

∴முதல் ஆண்டு தேய்மானம் ₹. 7,500

இரண்டாம் ஆண்டு தேய்மானம் ₹. 6,375

**17.**

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) இரயில்வேத் துறைக்கு, இரயில் தண்டவாளம் அமைக்க செலுத்திய தொகை ₹. 50,000. | முதலினச் செலவு |
| (ii) பழைய அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம். | வருவாயின நட்டம் |
| (iii) சரக்கு விற்பனையின் பேரில் செலுத்திய ஏற்றிச்செல் கட்டணம். | வருவாயினச் செலவு |

## பகுதி - இ

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $5 \times 3 = 15$

**18. அனாமத்துக் கணக்குப்பற்றிக் குறிப்பு எழுதவும்.**

- இருப்பாய்வு சமநிலை அடையாத போது, வேறுபாட்டுத் தொகையை, அனாமத்துக் கணக்கு என்ற தற்காலிகக் கணக்கில் பற்று அல்லது வரவு வைக்க வேண்டும்.



www.Padasalai.Net

- பற்று இருப்புகளின் கூட்டுத் தொகையைக் காட்டிலும் வரவு இருப்புகளின் கூட்டுத் தொகை மிகையாக இருக்கும் போது பற்று வைக்கப்படும்.
- மாறாக, வரவு இருப்புகளின் கூட்டுத்தொகை பற்று இருப்புகளின் கூட்டுத் தொகையைவிடக் குறைவாக இருப்பின் வரவு வைக்க வேண்டும்.

**19. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?**

1. <u>தேய்வு மற்றும் உராய்வு</u>
   - சாதாரணமாக புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும் போது, அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது.
   - தேய்வு ஏற்படும்போது, நிலைச் சொத்தின் மதிப்பு விகிதாச் சாரப்படி குறைகிறது.
2. <u>காலப்போக்கு</u>
   - காலப்போக்கு காரணமாக, ஒரு சில சொத்துகளை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் இருந்தாலும், அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.
3. <u>வழக்கொழிவு</u>
   - நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைவது வழக்கொழிவு எனப்படும்.
   - புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையான செயல்முறைகள் காரணமாக, இது ஏற்படுகிறது.

   <u>உதாரணமாக</u>, நவீன கால கணினிகள் பயன்பாட்டாளர்களால் விரும்பப்படுவது.
4. <u>நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருப்பது</u>
   - தேவைக்கான நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கும்போது, அச்சொத்தின் பயன்பாடு நிறுத்தப்படுகிறது.
   - நிறுவனத்தின் திறனை விரிவாக்கம் செய்யும் போது , இச்சொத்துகளின் திறன் போதுமானதாக இல்லாமல் போகலாம்.
5. <u>பராமரிப்பின்மை</u>
   - சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது, அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது.
   - சொத்துகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால், அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.
6. <u>அசாதாரணமான காரணிகள்</u>
   - தீ விபத்து, இயற்கைச் சீற்றங்கள் போன்ற அசாதாரண காரணிகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில், நிலைச் சொத்தின் பயன்பாடு குறைந்து, நீக்கப்படும் நிலைக்கும் கொண்டு செல்லலாம்.

**20.** (அ) விற்பனை கணக்கில் ₹. 400 வரவு வைக்க வேண்டும்.

(ஆ) விற்பனைத் திருப்ப கணக்கில் ₹. 500 வரவு வைக்க வேண்டும்.

(இ) கொள்முதல் கணக்கில் ₹. 600 பற்று வைக்க வேண்டும்.

(ஈ) கொள்முதல் திருப்ப கணக்கில் ₹. 700 பற்று வைக்க வேண்டும்.

(உ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கில் ₹. 800 பற்று வைக்க வேண்டும்.

**21.** சொத்தின் ஆரம்ப அடக்கவிலை = வாங்கிய விலை + நிறுவகைச் செலவுகள்

= ₹. 38,000 + ₹. 12,000 = ₹. 50,000

1) ஆண்டு தேய்மானத் தொகை = $\dfrac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை – எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$





$= \dfrac{50{,}000-6{,}000}{4} = \dfrac{44{,}000}{4}$ = ₹. 11,000

2) தேய்மான விகிதம் $= \dfrac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$

$= \dfrac{11{,}000}{50{,}000} \times 100 = 22\%$

**22.**

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) கட்டடம் கட்டியதற்கான தொகை ₹ .10,00,000. | முதலினச் செலவு |
| (ii) அறைகலன் பழுதுபார்த்தது ₹. 50,000. | வருவாயினச் செலவு |
| (iii) கட்டடத்தை வெள்ளை அடிப்பதற்கானச் செலவு ₹. 80,000. | வருவாயினச் செலவு |
| (iv) பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டியது ₹. 4,00,000. | முதலினச் செலவு |

**23. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.**

| வ.எண் | அடிப்படை | முதலின வரவு | வருவாயின வரவு |
|---|---|---|---|
| 1 | தன்மை | அடிக்கடி நிகழாதத் தனமையுடையது | அடிக்கடி நிகழும் தனமையுடையது |
| 2 | அளவு | பெரும்பாலும் பேரளவிலான தொகையாக இருக்கும் | சிறிய அளவிலான தொகையாக இருக்கும் |
| 3 | பகிர்வு | இத்தொகையை இலாபமாக கருதி பகிர்ந்தளிக்க முடியாது | வருவாயின செலவைக் காட்டிலும், மிகுதியான வருவாயின வரவுகள், இலாபமாகக் கருதிப் பகிர்ந்து அளிக்கப்படும் |

**24. தேய்மானம் நீக்கவேண்டியதன் நோக்கங்கள் யாவை?**

1. <u>சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய</u>
   - பொருத்துகை கோட்பாட்டின்படி, ஒரு கணக்காண்டில் செய்த செலவுகளை, அந்தக் காலத்தில் ஈட்டிய வருமானத்துடன் பொருத்திப் பார்க்கப்பட வேண்டும்.
2. <u>உண்மையான, மற்றும் நியாயமான நிதி நிலையை உணர்த்த</u>
   - நிலைச் சொத்துகளின் மீது தேய்மானம் நீக்கப்படும் போது, நிலைச் சொத்தின் ஏட்டு மதிப்பு, அதன் தேய்மானத் தொகை அளவிற்கு குறைக்கப்பட்டு, மீதித் தொகை இருப்பு நிலைக்குறிப்பில் காண்பிக்கப்படுகிறது.
   - இருப்பு நிலைக் குறிப்பானது, உண்மையான மற்றும் நியாயமான நிதி நிலையை உணர்த்த வேண்டும்.
   - ஆகையால், நிலைச் சொத்துகள் அதன் குறைந்து செல் மதிப்பில் காண்பிக்கப்பட வேண்டும்.

3. <u>நிலைச் சொத்தினை மாற்றுவதற்காக</u>
   - இலாப நட்டக்கணக்கில் தேய்மானம் பற்று வைக்கப்படும் போது, அதற்கு சமமான தொகை வணிகத்தில் தக்கவைக்கப் படுகிறது அல்லது வணிகத்திற்கு வெளியே முதலீடு செய்யப்படுகிறது.
   - சொத்தின் பயனுள்ள வாழ்நாள் முடிவுக்கு வரும்போது, வணிகத்தில் உள்ள வளங்களைக் கொண்டு ஒரு புதிய சொத்து வாங்க முடியும்.
4. <u>வரிச் சலுகைகளைப் பெற</u>
   - இந்திய வருமான வரிச் சட்டத்தின்படி, வணிக வருமானத்திற்கு வரி கணக்கிடும் போது தேய்மானம் வருமானத்திலிருந்து கழித்து காண்பிக்கப்பட வேண்டும்.
   - ஆகையால், வரிச் சுமையை குறைப்பதற்காக தேய்மானம் கணக்கிடப்பட்டு இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.
5. <u>சட்டத் தேவையைப் பூர்த்தி செய்ய</u>
   - வருமான வரிச் சட்டத்திற்கு மட்டுமல்லாமல், பிற சட்டத்தின் சரத்துகளை பூர்த்தி செய்வதற்காக, நிலைச் சொத்தின் மதிப்பிலிருந்து தேய்மானம் நீக்கப்படுகிறது.

## பகுதி – ஈ

**<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.</u>** $3 \times 5 = 15$

25. அ) <u>திருத்தியப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | இயந்திரம் க/கு ப<br>கூலி க/கு<br>( இயந்திரம் நிறுவுவதற்குச் செலுத்திய கூலி ₹. 2,000 கூலிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டதை திருத்தியது ) | | 2,000<br><br> | <br>2,000 |

(ஆ) விற்பனைத் திருப்ப கணக்கில் ₹. 1,000 பற்று வைக்க வேண்டும்.

(இ) கொள்முதல் கணக்கில் ₹. 1,800 வரவு வைக்க வேண்டும்.

(ஈ) விற்பனை கணக்கில் ₹. 1,500 பற்று வைக்க வேண்டும்.

<u>திருத்தியப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| உ | முகில் க/கு ப<br>அகில் க/கு<br>ரொக்க க/கு<br>( முகிலுக்கு ரொக்கம் ₹. 2,800 செலுத்தியது அகில் கணக்கில் ₹. 2,000 என பற்று வைக்கப்பட்டுள்ளது திருத்தியது) | | 2,800 | <br>2,000<br>800 |





( அல்லது )

<u>திருத்திய பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | சம்பளம் க/கு ப<br>குமணன் க/கு<br>( குமணன் கணக்கு தவறாக பற்று வைத்ததை திருத்தியது ) | | 350 | <br>350 |
| ஆ | வாடகை க/கு ப<br>செங்குட்டுவன் க/கு<br>(செங்குட்டுவன் கணக்கு தவறாக பற்று வைத்ததை திருத்தியது ) | | 6,000 | <br>6,000 |
| இ | விற்பனைக் க/கு ப<br>அறைகலன் க/கு<br>( விற்பனை கணக்கு தவறாக வரவு வைத்ததை திருத்தியது ) | | 2,000 | <br>2,000 |
| ஈ | குமாரராசா க/கு ப<br>விற்பனை க/கு<br>( குமாரராச கணக்கு தவறாக வரவு வைத்ததை திருத்தியது ) | | 10,000 | <br>10,000 |
| உ | எடுப்புகள் க/கு ப<br>மணிமாறன் க/கு<br>( மணிமாறன் கணக்கு தவறாக பற்று வைத்ததை திருத்தியது ) | | 1,000 | <br>1,000 |

26. அ)

இயந்திரத்தின் அடக்கவிலை = வாங்கிய விலை + வண்டிக்கட்டணம்+ நிறுவகைச் செலவுகள்

= ₹. 36,000 + ₹. 2,500 + ₹. 1,500 = ₹. 40,000

$$\text{ஆண்டு தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$$

$$= \frac{40{,}000-0}{5} = \frac{40{,}000}{5} = ₹.\ 8{,}000$$

## குறிப்பேட்டுப்பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2016 ஜன 1 | இயந்திரம் க/கு ப<br>வங்கி க/கு<br>( இயந்திரம் வாங்கியது ) | | 36,000 | 36,000 |
| 2016 ஜன 1 | இயந்திரம் க/கு ப<br>வங்கி க/கு<br>( நிறுவதற்கான செலவுகள் செய்தது ) | | 4,000 | 4,000 |
| டிசம்பர் 31 | தேய்மானம் க/கு ப<br>இயந்திரம் க/கு<br>( தேய்மானம் நீக்கியது ) | | 8,000 | 8,000 |
| டிசம்பர் 31 | இலாப நட்ட க/கு ப<br>தேய்மானம் க/கு<br>( தேய்மானம் இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்பட்டது ) | | 8,000 | 8,000 |
| 2017 டிசம்பர் 31 | தேய்மானம் க/கு ப<br>இயந்திரம் க/கு<br>( தேய்மானம் நீக்கியது ) | | 8,000 | 8,000 |
| டிசம்பர் 31 | இலாப நட்ட க/கு ப<br>தேய்மானம் க/கு<br>( தேய்மானம் இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்பட்டது ) | | 8,000 | 8,000 |

ப **இயந்திர கணக்கு** வ

| நாள் | விவரம் | தொகை ₹. | நாள் | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| 1.1.2016 | வங்கி க/கு | 36,000 | 31.12.2016 | தேய்மானம் க/கு | 8,000 |
| | வங்கி க/கு | 4,000 | 31.12.2016 | இருப்பு கீ/இ | 32,000 |
| | | 40,000 | | | 40,000 |
| 1.1.2017 | இருப்பு கீ/கொ | 32,000 | 31.12.2017 | தேய்மானம் க/கு | 8,000 |
| | | | 31.12.2017 | இருப்பு கீ/இ | 24,000 |
| | | 32,000 | | | 32,000 |
| 1.1.2018 | இருப்பு கீ/கொ | 24,000 | | | |

( அல்லது )

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613



ஆ)

## தேய்மானத் தொகை காணல்

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| அறைகலனின் மதிப்பு 5,000<br>நிறுவுதல் செலவு 1,000 | 6,000 |
| கழிக்க : முதல் ஆண்டு தேய்மானம் ( 6,000 x 10/100 ) | 600 |
| | 5,400 |
| கழிக்க : இரண்டாம் ஆண்டு தேய்மானம் ( 5,400 x 10/100 ) | 540 |
| சொத்தின் ஏட்டு மதிப்பு | 4,860 |

## குறிப்பேட்டுப்பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2016 ஜன 1 | அறைகலன் க/கு ப<br>வங்கி க/கு<br>( அறைகலன் வாங்கியது ) | | 6,000 | 6,000 |
| டிசம்பர் 31 | தேய்மானம் க/கு ப<br>அறைகலன் க/கு<br>( தேய்மானம் நீக்கியது ) | | 600 | 600 |
| டிசம்பர் 31 | இலாப நட்ட க/கு ப<br>தேய்மானம் க/கு<br>( தேய்மானம் இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்பட்டது ) | | 600 | 600 |
| 2017 டிசம்பர் 31 | தேய்மானம் க/கு ப<br>அறைகலன் க/கு<br>( தேய்மானம் நீக்கியது ) | | 540 | 540 |
| டிசம்பர் 31 | இலாப நட்ட க/கு ப<br>தேய்மானம் க/கு<br>( தேய்மானம் இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்பட்டது ) | | 540 | 540 |

27. அ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) சரக்கு விற்பனைவாயிலாகப் பெற்றது ₹. 75,000. | வருவாயின வரவு |
| (ii) வங்கியிடமிருந்து பெற்றக் கடன் ₹. 2,50,000. | முதலின வரவு |
| (iii) முதலீடு விற்பனைச் செய்தது ₹. 1,20,000. | முதலின வரவு |
| (iv) கழிவுப் பெற்றது ₹. 30,000. | வருவாயின வரவு |
| (v) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது ₹. 1,400. | முதலினச் செலவு |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

( அல்லது )

ஆ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) மூன்று ஆண்டுகளுக்கு பயனளிக்கும் வகையில் செய்யப்பட்ட விளம்பரச் செலவு. | நீள்பயன் வருவாயினச்செலவு |
| (ii) கட்டடம் பதிவு செய்யும் போது செலுத்திய பதிவுக் கட்டணம். | முதலினச் செலவு |
| (iii) பழைய கட்டடம் வாங்கிய போது, அதனைப் பராமரித்து, வண்ணம் பூசி பயன்படுத்துவதற்கு ஏற்றாற்போல் மாற்றியதற்கானச் செலவு. | முதலினச் செலவு |
| (iv) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹. 10,000 | வருவாயினச் செலவு |
| (v) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு | வருவாயினச் செலவு |



www.Padasalai.Net